**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 19/2024**

பெயர் : மரகதம் P.W.1. Cross

க/பெ. : குருமூர்த்தி

தேதி : 24.11.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை:** –

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்தில் இருந்த கரிவேலம் மரங்களையும், வேலியையும் பிரதிவாதி அகற்றிவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண். 567/41 ஆகும். அதன் நான்கெல்லை தற்போது நினைவில் இல்லை. தாவா சொத்தானது எனது தகப்பனார் எனக்க எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் படி எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் தான செட்டில் மெண்ட் எழுதிவைத்த பின்னர் எவ்வளவு நாட்களில் இறந்தார் என்றால் 2 வருடங்கள் கழித்துஇறந்தார். தான செட்டில் மெண்ட் பத்திரம் 28.12.2019 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் என்றால் சரிதான். தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிவைக்கும் போது தாவா சொத்தை அளவீடு செய்தோமா என்றால் இல்லை. தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் நான்கெல்லை எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

2. வாசாஆ 5 ஆன ஆவணத்திலும் நான்கெல்லை குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான அசல் ஆவணம் தொலைந்துவிட்டதாக எனது தகப்பனார் கடந்த 22.12.2019அன்று மதுரை ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன மனு ரசீதில் உள்ள மனுதாரரின் கையொப்பமும் அதற்கு கீழ் உள்ள கையொப்பமும் எனது தகப்பனாரின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. இரண்டு கையொப்பமும் எனது தகப்பனாரின் கையொப்பம் தான். எனது தகப்பனார் புகார் கொடுத்த அதே தேதியில் மேற்படி ஆவணத்தை கண்டுபிடிக்க இயலவில்லை என காவல் நியைலத்தினரால் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்த 6 நாட்களில் எனது தகப்பனார் எனக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிவைக்கபட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஏற்கனவே எனது தகப்பனார் தாவா சொத்தினை பிரதிவாதிக்கு விற்று

விட்டார் என்றாலும், பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக எனது தகப்பனார் மதுரையில் ஆவணம் தொலைந்து போனதான புகார் கொடுத்து சான்று பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. நான் மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய வாசாஆ 3 ஆன புகாரில் பிரதிவாதி எந்த தேதியில் தாவா சொத்தினை பொக்லிங் வைத்து சுத்தம் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்து பிரதிவாதியின வசத்தில் உள்ளது என்றாலும், அவர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைவதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 நாட்களுக்கு முன்பு பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்தார் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன். என்றால் சரிதான். அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து பிரதிவாதியின் வசத்தில் உள்ளது என்றாலும், அதனால் அவர் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் நான்கெல்லை குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பல வருடங்களாக தாவா சொத்து பிரதி'வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும், அதில் அவர் வேலி வைத்து மரங்கள் வைத்து பராமறித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

5. தாவா சொத்து எனது வசத்தில் இல்லை என்பதால் தான் தாவா சொத்திற்கான நான்கெல்லை எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனதுஅனுபவத்தில் இல்லாததாலும், பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதாலும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும், இந்த வழக்க தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.